# ஜப்பானில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்க ஒரு சிறந்த வாய்ப்பு!

## கட்டுமானப் பணிக்காக ஆண்களும் பராமரிப்புப் பணிக்காக பெண்களும்

ஜப்பானிய திறன் மேம்பாட்டு வேலைவாய்ப்பு (ESD) திட்டத்தின் கீழ், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஜப்பானின் கட்டுமானத் துறையில் ஆண்களுக்கான மற்றும் பராமரிப்பு (கேர் கிவிங்) துறையில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

குறிப்பிட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், 2026 நவம்பர் 03 அன்று காலை 8.30 மணிக்கு, பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தையில் (Denzil Kobbekaduwa Mawatha) அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (Sri Lanka Bureau of Foreign Employment) கேட்போர் கூடத்திற்கு வருகை தருமாறு அழைக்கப்படுகிறார்கள். தயவுசெய்து தொடர்புடைய அனைத்துச் சான்றிதழ்களையும் ஆவணங்களையும் உடன் கொண்டு வரவும்.

**(குறிப்பு - ஜப்பானிய விசாவுக்கு முன்னதாக விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், இதற்கு விண்ணப்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.)**

**கட்டுமானத் துறையில் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்:**

- வயது 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.
- ஜப்பானிய மொழித் திறன் தேர்வில் (JLPT) **N5** நிலை,NAT தேர்வு சித்தி,JFTA1 அல்லது அதற்கு இணையான அல்லது அதற்கும் மேலான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- 13 ஆண்டுகள் பள்ளிக் கல்வியை முடித்திருக்க வேண்டும். (க.பொ.த. (உ/த) தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டும் அல்லது NVQ 3 அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் தொழிற்பயிற்சி பாடத்திட்டத்தை முடித்திருக்க வேண்டும்.)
- உடலில் பச்சை (Tattoos) குத்தியிருக்கக் கூடாது.
- உயரம் 160 செ.மீ அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.
- எடை 50 கிலோ அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.
- நிறக்குருடு (Color-blindness) குறைபாடு இருக்கக்கூடாது.

**பராமரிப்புத் துறையில் தேவைப்படும் அடிப்படைத் தகுதிகள்:**

- வயது 18 முதல் 30க்குள் இருக்க வேண்டும்.
- ஜப்பானிய மொழித் திறன் தேர்வில் (JLPT) **N4** நிலை,NAT தேர்வு சித்தி,JFT A2.2 அல்லது அதற்கு இணையான அல்லது அதற்கும் மேலான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.
- 13 ஆண்டுகள் கல்வி பயின்றிருக்க வேண்டும் (க.பொ.த. (உ/த) தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டும் அல்லது NVQ 3 அல்லது அதற்கு மேலான நிலையில் தொழிற்பயிற்சி பாடத்திட்டத்தை முடித்திருக்க வேண்டும்).
- உடம்பில் பச்சை(Tattoos/டாட்டு) குத்தியிருக்க கூடாது.
- உயரம் 150 செ.மீ அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.
- எடை 40 கிலோ அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.
- நிறக்குருடு (Color-blindness) குறைபாடு இருக்கக் கூடாது.

**தேவையான ஆவணங்கள்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (SLBFE இணையதளத்தில் - www.slbfe.lk - வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பம்)
- பாடசாலை விலகல் சான்றிதழ்
- க.பொ.த. (உ/த) பெறுபேற்றுத் தாள் / NVQ சான்றிதழ்கள்
- தேசிய அடையாள அட்டை
- JLPT N5/N4, NAT 5/4 அல்லது JFT சான்றிதழ் மற்றும் அதன் பெறுபேற்றுத் தாள்

**மேலதிக தகவல்களுக்கு- 1989**

**(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மூலமாக மட்டுமே ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்)**

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்